அசல்

20.2.1935 மு. கதிரேசன்

அசல் –1 நகல் –

PANDITHAMANI
M. KATHIRESA CHETTIAR
LECTURER IN TAMIL
ANNAMALAI UNIVERSITY

உ.

ANNAMALAI NAGAR

௨0. ௨. 1935.

அன்புமிக்கஐயா, சுபம்.

10. ௨. 35ல் தாங்களன்புகூர்ந்தனுப்பிய கடிதம் வரப்பெற்று மகிழ்ந்தேன். யான் வெளியூர்களுக்குப் போய்வந்தமையால் பதில் எழுதத் தாழ்த்தது. மன்னிக்க வேண்டும்.

||தமிழ்ப்பணி செய்தலையே சிறந்த தொண்டாக மேற்கொண்டு தமிழ்நிலத்தாருக்கு அரியபல பழந்தமிழ் நூல்களை வெளியிட்டுதவிவரும் தமிழ்ப்பெரியாராகிய மஹாமஹோபாத்தியாய, டாக்டர், சாமிநாதையரவர்களின் எண்பதாம் ஆண்டு நிறைவுவிழாக் கொண்டாடுதற்கு இச் செய்திருக்கும் ஏற்பாடுகளெல்லாம் மிகவும் மகிழ்ச்சிதருகின்றன. அப்பெரியாருக்குச் செய்யும் சிறப்புக்களெல்லாம் தமிழ்மொழிக்குச் செய்தனவாகவே முடியும். ஆதலின் இச்செயலிற்றலைப்படுதல் தமிழ்நிலத்துள்ளார் எல்லோருக்கும் உரிய சிறந்த கடமையாகும்.||

அவ்விழாக் கொண்டாட்டத்திற்கு இயன்றபொருளுதவியைச் செய்யும்படி குறித்திருக்கிறீர்கள். இவ்விடம் அண்ணாமலைப்பல்கலைக்கழகத்துத் தமிழ்த்தலைவர் இங்குள்ள தமிழ்மாணிகளெல்லோரிடத்தும் சிறிது சிறிதாக வாங்கிச் சேர்த்து அனுப்புவதாக முயன்றுவருகிறார்கள். என்னால் இயன்றதையும் அவர்களிடஞ் சேர்ப்பித்துள்ளேன். இன்னுஞ் சின்னாளில் தொகுத்த தொகையை அவர்கள் தங்களுக்கு அனுப்புவார்கள்.

இறைவன் திருவருளால் விழா இனிது நிறைவேறுக.

தங்களன்பன்,
மு. கதிரேசன்